ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

**திகதி** 02.10.2018

## நாணயக் கொள்கை மீளாய்வு - இல. 06 2018

**இலங்கை மத்திய வங்கி அதனது கொள்கை வட்டி வீதங்களைத் தற்போதைய மட்டங்களிலேயே பேணுகின்றது.**

**இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2018 ஒத்தோபர் 01இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் கொள்கை வட்டி வீதங்களை அவற்றின் தற்போதைய மட்டத்திலேயே பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. அதன்படி மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பன முறையே 7.25 சதவீதமாகவும், 8.50 சதவீதமாகவும் தொடர்ந்தும் காணப்படும்.**

**வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் நடுத்தரகாலத்தில் பணவீக்கத்தை நடு ஒற்றை இலக்க மட்டங்களில் உறுதிப்படுத்தும் நோக்குடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளாதாரங்களின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளைக் கரிசனையுடன் கருத்திற் கொண்டு நாணயச் சபையானது மேலே கூறப்பட்ட தீர்மானத்தினை மேற்கொண்டுள்ளது.**

**ஐ.அ.டொலரின் தொடர்ச்சியான வலுப்பெறலுடன் உலகளாவிய ரீதியில் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைமைகள் அவதானிக்கப்பட்டுள்ளன.**

ஐக்கிய அமெரிக்க டொலரின் பரந்த அடிப்படையிலான பலப்படுத்துதலைத் தொடர்ந்து பெடறல் றிசேர்வால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வட்டி வீதங்கள் மீதான அதிகரிப்பு மற்றும் வட்டி வீதங்கள் மேலும் உயர்வடையும் என்ற எதிர்பார்ப்புக்கள் என்பன எழுச்சி பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்கள் மீது அழுத்தத்தைத் தோற்றுவித்துள்ளன. உள்நாட்டு நாணயங்கள் மீதான குறிப்பிடத்தக்களவான அழுத்தங்களுக்குப் பதிலிறுத்தும் வகையில் எழுச்சி பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்கள் கொள்கை வட்டி வீதங்களை உயர்த்துவதன் மூலம் அவற்றின்

நாணயக் கொள்கை நிலையை ஏற்கனவே இறுக்கமாக்கியுள்ளன. அதேவேளை, பன்னாட்டு எண்ணெய் விலைகளின் மீது அன்மைக்காலத்தில் அவதானிக்கப்பட்ட மேல்நோக்கிய போக்குகள் உலகப் பொருளாதாரத்தினால் எதிர்நோக்கப்படுகின்ற சவால்களை மேலும் மோசமாக்குவது போல் காணப்படுகின்றது.

**வெளிநாட்டுத்துறை கலப்பான செயலாற்றம் ஒன்றைப் பதிவு செய்துள்ள அதேவேளை செலாவணி வீதமானது விரைவான வேகம் ஒன்றில் தேய்வடைந்துள்ளது.**

ஏற்றுமதி வளர்ச்சியைக் காட்டிலும் இறக்குமதியின் வளர்ச்சி அதிகரித்தமையின் காரணத்தினால் ஆண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது தொடர்ந்தும் விரிவடைந்துள்ளது. இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட கணிசமானளவான எழுச்சியானது எரிபொருட்கள், தங்கம் மற்றும் தனிப்பட்ட வாகனங்களின் இறக்குமதி வளர்ச்சியாலேயே தூண்டப்பட்டுள்ளது. ஆண்டு காலத்தில் சுற்றுலாத்துறையின் குறிப்பிடத்தக்களவு செயலாற்றத்தினால் பணிகள் கணக்கு உட்பாய்ச்சல்களை வெளிப்படுத்தியதுடன் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு பலமடைந்து காணப்பட்டிருந்தது. எனினும் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்கள் சென்மதி நிலுவை மீது அழுத்தமொன்றை ஏற்படுத்தியுள்ளது. ஐ.அ.டொலர் பலமடைகின்ற சூழலில் அதிகரித்த இறக்குமதி வளர்ச்சி மற்றும் மூலதன வெளிப்பாய்ச்சல் என்பவை செலாவணி வீதம் மீது குறிப்பிடத்தக்களவு அழுத்தத்தை ஏற்படுத்தியிருந்தன. இதன்படி இந்தியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேசியா போன்ற ஏனைய பல ஒத்த நாடுகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் ஆண்டின் 2018 ஒத்தோபர் 01 வரையான காலப்பகுதியில் ஐ.அ. டொலரிற்கெதிராக இலங்கையின் ரூபாவானது 9.7 சதவீதமாக விரைவான வேகம் ஒன்றில் தேய்வடைந்துள்ளது. மேலும் 2018 செத்தெம்பரின் முதல் சில வார காலப்பகுதிகளில் செலாவணி வீத சீராக்கங்களின் குழப்ப நிலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கி தலையிட்டிருந்தது. தனிப்பட்ட மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்காகத் திறக்கப்படும் நாணயக் கடிதங்களின் மீதான எல்லை வைப்புத் தேவைப்பாடு, தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்களின் இறக்குமதி மீதான காசு எல்லை மற்றும் குறிக்கப்பட்ட காலம் வரையில் சலுகை அடிப்படையிலான வாகன அனுமதியைத் தடுத்து வைத்தல் போன்ற அவசரகால கொள்கை வழிமுறைகளை மத்திய வங்கியும் அரசாங்கமும் அறிமுகப்படுத்தியுள்ளன. இத்தகைய வழிமுறைகளானது வெளிநாட்டு நாணயத்தின் மிகையான கேள்வியைத் தளர்வடையச் செய்வதால் உள்நாட்டு அந்நிய செலாவணிச் சந்தையில் ஏற்கனவே அவதானிக்கப்பட்ட அழுத்தங்கள் குறைவடைந்து செலாவணி வீதம் உறுதியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**உள்நாட்டு பொருளாதாரத்தின் மிதமான வளர்ச்சி மேம்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளுக்கிணங்க, இலங்கையின் பொருளாதாரமானது 2018இன் இரண்டாம் காலாண்டில் 3.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ள அதேவேளையில் 2018இன் முதலாம் காலாண்டிற்கான மதிப்பீடுகள் 3.2 சதவீதத்திலிருந்து 3.5 சதவீதத்திற்கு மேல்நோக்கித் திருத்தப்பட்டுள்ளது. 2018இன் இரண்டாம் காலாண்டிற்கான பொருளாதார வளர்ச்சியானது பணிகள் மற்றும் வேளாண்மைத் துறைகளின்

சாதகமான உத்வேகத்தினால் தூண்டப்பட்டுள்ள அதேவேளை கைத்தொழில் துறையின் வளர்ச்சியானது தொடர்ந்தும் மிதமடைந்துள்ளது. தற்போதைய பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் எதிர்வுகூறல்களின் அடிப்படையில் பொருளாதாரமானது ஆண்டின் எஞ்சிய காலாண்டுகளில் 2018இன் முதலாம் காலாண்டினை விட உயர்ந்த வீதமொன்றில் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. போட்டிமிக்க நெகிழ்ச்சி வாய்ந்த செலாவணி வீதம், குறைந்த பணவீக்கச் சூழல் என்பன ஏற்றுமதி மற்றும் முதலீடுகள் என்பவற்றிற்கு ஆதரவளிக்கும் வகையில் அதிகார சபைகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அமைப்பியல் சீர்திருத்தங்கள் நடுத்தர காலத்தின் வலுவான மற்றும் நீடித்த வளர்ச்சியை வசதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**அண்மைக் காலத்தில் தற்காலிகமாகத் தோன்றிய விலை அழுத்தங்களுக்கு மத்தியிலும் பணவீக்கமானது அதன் இலக்கு வீச்சான 4-6 சதவீதத்தினுள் தொடர்ந்தும் காணப்படுகின்றது.**

நிருவாக விலைகளின் மேல்நோக்கிய திருத்தங்கள் மற்றும் தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலைகளின் அதிகரிப்பு என்பவற்றின் தாக்கத்தினால் முன்னைய மாதங்களில் பணவீக்கத்தில் நிலவிய தற்காலிக அதிகரிப்புக்களைத் தொடர்ந்து குறிப்பாக தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தமையால் 2018 செத்தெம்பரில் முதன்மைப் பணவீக்கமானது மெதுவடைந்துள்ளது. எனினும் உள்நாட்டுப் பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் ஏனைய நிருவாக விலைகளில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தங்கள் அதேபோன்று நாணயத் தேய்வின் தாக்கத்திலிருந்து தோன்றிய பணவீக்கம் என்பன இனிவரும் மாதங்களிலும் பணவீக்கம் மீது அழுத்தங்களை ஏற்படுத்தலாம். இருப்பினும் இத்தகைய தற்காலிக அழுத்தங்களுக்கு மத்தியிலும் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் உணவுப் பொருட்களின் விலைகளின் வீழ்ச்சி மற்றும் சாதகமான தளத்தாக்கம் என்பவற்றின் ஆதரவால் மேலும் தேய்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொருத்தமான கொள்கைச் சீராக்கங்களினால் நடுத்தர காலத்தில் பணவீக்கமானது இலக்கு வீச்சான 4-6 சதவீதத்திற்குள்ளேயே தொடர்ந்தும் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**உள்நாட்டு சந்தை நிலைமைகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் குறுங்கால சந்தை வட்டி வீதங்கள் காணப்படுகின்ற அதேவேளை நாணய விரிவாக்கம் தொடர்ந்தும் படிப்படியாக மெதுவடைகின்றது.**

உள்நாட்டுப் பணச் சந்தையில் நிலவிய இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் குறுங்கால வட்டி வீதங்கள் மேல்நோக்கித் திருத்தப்பட்டுள்ள அதேவேளை முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தை ஆகிய இரண்டிலும் அரச பிணையங்கள் மீதான விளைவுகளில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலாக சந்தை வட்டி வீதங்கள் குறிப்பாக பல்வேறுபட்ட சந்தை கூறுகளின் கடன் வழங்கல் வட்டி வீதங்கள் உயர்ந்த அளவுகளிலேயே தொடர்ந்தும் காணப்படுகின்றது. இதனால் இலங்கையின் உண்மை வட்டி வீதங்கள் பல்வேறுபட்ட ஒத்த எழுச்சி பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களினை விடத் தொடர்ந்தும் மேல் மட்டத்திலேயே காணப்படுகின்றமையானது நாணயக் கொள்கையில் இறுக்கமான சார்பு நிலையை ஏற்கனவே அடைந்துள்ளமையை பிரதிபலிக்கின்றது.

தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வீழ்ச்சியடைந்தமையானது ஓகத்து 2018இன் விரிந்த பண வளர்ச்சி மிதமடைவதற்கு ஆதரவாக அமைந்துள்ளது. இத்தகைய நாணய மற்றும் கொடுகடன் விரிவாக்கத்தின் போக்கானது பொருளாதாரத்தின் எதிர்பார்க்கப்பட்ட நடுத்தர கால வளர்ச்சிப் பாதையுடன் இசைந்து செல்லும் வகையிலான பாரிய நாணய உறுதிப்பாட்டினைக் குறித்துக் காட்டுகின்றது. இதற்கு மேலாக 2018இன் முதலரைப் பகுதி வரையான தரவுகளின் அடிப்படையில் பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளுக்குமான கொடுகடன் விரிவடைந்தமையானது, பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் நிதியியல் வளங்கள் போதுமானளவில் கிடைக்கத்தக்கதாக இருப்பதனைக் குறித்துக் காட்டுகின்றது

**கொள்கை வட்டி வீதங்கள் மாற்றமடையவில்லை**

தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளின் அடிப்படையில் குறிப்பாக வெளிநாட்டுத் துறையில் நிலவிய சமமின்மைகளைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளைக் கருத்திற்கொண்டு மத்திய வங்கியின் நாணயச் சபையானது தற்போதைய நாணயக் கொள்கை நிலையைத் தொடர்ந்தும் பேணுவது பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டுள்ளது. அதன்படி நாணயச் சபையானது மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பவற்றை அவற்றின் தற்போதைய மட்டங்களிலேயே பேணுவதென நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வீதங்கள் மாற்றப்படவில்லை** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 8.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 7.50% |

**தகவல் குறிப்பு :-**

ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களுடனான பத்திரிகை மாநாடு இன்று (2018 ஒத்தோபர் 02) முற்பகல் 11.30 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் ஜோன் எக்ஸ்ரர் பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2018 நவெம்பர் 14ஆம் நாள் வெளியிடப்படும்.

தரவு இணைப்புக்கள்:

**அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (தற்காலிகமானவை)**

| பொருளாதார நடவடிக்கைகள் | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **2016** | **2017** | | | | | **2018** | |
| | வருடாந்தம் | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு | மூன்றாம் காலாண்டு | நான்காம் காலாண்டு | வருடாந்தம் | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு |
| வேளாண்மை | **-3.8** | -4.4 | -3.1 | -3.0 | 7.1 | **-0.8** | 5.3 | 4.5 |
| கைத்தொழில் | **5.8** | 3.7 | 5.6 | 5.3 | 4.1 | **4.6** | 1.1 | 2.3 |
| பணிகள் | **4.7** | 4.3 | 2.7 | 2.8 | 3.2 | **3.2** | 4.8 | 4.8 |
| மொ.உ.உ. | **4.5** | **3.4** | **3.0** | **3.2** | **3.5** | **3.3** | **3.5** | **3.7** |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

**அட்டவணை 02: பணவீக்கம்**

| மாதம் | | மாச்சு 18 | யூன் 18 | யூலை 18 | ஓகத் 18 | செத் 18 |
|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 4.2 | 4.4 | 5.4 | 5.9 | 4.3 |
| | தேநுவிசு(2013=100) | 2.8 | 2.5 | 3.4 | 2.5 | - |
| மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 3.4 | 3.4 | 3.9 | 3.7 | 3.8 |
| | தேநுவிசு(2013=100) | 1.9 | 1.8 | 2.3 | 2.7 | - |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

**அட்டவணை 03: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)**

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மாச் 18 | யூன் 18 | யூலை 18 | ஓகத் 18 | மாச் 18 | யூன் 18 | யூலை 18 | ஓகத் 18 |
| ஒதுக்குப் பணம் | 997 | 999 | 1,001 | 1,005 | 11.8 | 12.0 | 11.9 | 10.2 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 6,607 | 6,748 | 6,795 | 6,866 | 16.4 | 14.9 | 13.5 | 13.5 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 106 | 101 | 172 | 167 | 128.6 | 141.1 | 237.1 | 433.1 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 6,500 | 6,646 | 6,624 | 6,700 | 7.5 | 8.6 | 8.4 | 9.8 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 2,278 | 2,273 | 2,226 | 2,272 | 2.9 | 1.7 | (1.3) | 1.5 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 557 | 619 | 636 | 639 | (2.6) | 8.5 | 19.7 | 22.6 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 5,022 | 5,156 | 5,202 | 5,248 | 15.3 | 14.9 | 14.7 | 14.3 |
| விரிந்த பணம் ($M_4$) | 8,112 | 8,292 (அ) | 8,333 | 8,403 | 16.7 | 14.8 (அ) | 13.0 | 12.7 |

(அ) திருத்தப்பட்டது

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 04: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | மாச்சு 18 முடிவில் | யூன் 18 முடிவில் | யூலை18 முடிவில் | ஓக. 18 முடிவில் | செத். 18 முடிவில் | 01 ஒத். 18 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 8.75 | 8.50 | 8.50 | 8.50 | 8.50 | 8.50 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 8.41 | 8.50 | 8.46 | 7.92 | 8.40 | 8.42 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | |
| 91-நாள் | 8.17 | 8.32 | 8.24 | 8.03 | 8.56 | - |
| 182-நாள் | - | 8.85 | 8.74 | 8.60 | - | - |
| 364-நாள் | 9.69 | 9.39 | 9.27 | 8.99 | 9.51 | - |
| **கடன் வழங்கல் வீதங்கள்** | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் (வாராந்தம்) | 11.55 | 11.33 | 11.52 | 11.67 | 11.74 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம் | 14.04 | 14.05 | 14.07 | 14.18 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன் வழங்கல் வீதம் | 14.25 | 13.94 | 13.95 | 14.35 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 9.00 | 8.92 | 8.64 | 8.66 | 8.69 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 11.41 | 11.26 | 10.82 | 10.81 | 10.84 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 10.33 | 10.57 | 10.43 | 10.24 | - | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*